**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 55/2020**

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 02–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 02.06.2026 | | |
| பெயர்: | முருகன்<br>(DW1– Cross ) | தகப்பனார் பெயர்: | பாவாடை |
| கிராமம்: | மாங்கனாம்பட்டு | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | விவசாய கூலி | வயது : | 57/2026 |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 02.06.2026</u>

**(ஆரம்பித்த நேரம் – 12.03)**

தாவா சொத்து திருமயிலாடி வட்டம் மாங்கனாம்பட்டு கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் அவரது இடத்தை சுமார் 5 அடி அளவிற்கு நான் ஆக்கிரமித்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தானது ரத்தினம் படையாச்சி குமாரர் கோவிந்தராஜ்க்கு சொந்தமாக இருந்தது என்றால் சரிதான். கோவிந்தராஜ் கூரைவீடு கட்டி தாவா சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரிதான்.

அதனால் தான் கோவிந்தராஜ்க்கு அவரது பெயரில் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். அதற்கான ஆவணம் வா.சா.ஆ.1 என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பு கோவிந்தராஜ் காலமாகிவிட்டார். சுமார் 25 வருடங்களுக்கு முன்பு தாவா சொத்தின் முன் பகுதியில் மாடிவீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். அந்த வீட்டிற்கான வீட்டு வரி ரசீது தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

மேற்படி வீட்டிற்கான மின்கட்டண ரசீதுகள் கோவிந்தராஜ் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அந்த ரசீதுகள் வா.சா.ஆ.3 என்றால் சரிதான்.

தாவா சொத்தின் பின் பகுதியில் மோகன் கூரைவீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். மாடிவீட்டிற்கு கிழக்கே பாதை விடப்பட்டுதான் பின் வீட்டிற்கு மோகன் சென்று வருகிறார் என்றால் முன்பு சென்றுக் கொண்டிருந்தார் தற்போது இல்லை. முன் பக்கம் மாடிவீட்டின் கிழக்கு பகுதியில் சன்செட் இரண்டரை அடி அளவில் நீட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மூன்று சன்செட் உள்ளது. மேற்படி சன்செட் தாவா சொத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எங்கள் இடத்தில் உள்ளது.

அப்படியென்றால் வாதி என்னுடைய இடத்தை ஆக்கிரமித்துவிட்டார் என்று சொல்ல வருகிறேனா என்றால் சரிதான். நான் ஊரில் இல்லாதபோது வாதி வீடு கட்டும்போதே ஆக்கிரமித்து கட்டிவிட்டார். மோகன் குடியிருந்து வருவதற்கான வீட்டு வரி ரசீது வா.சா.ஆ.6 என்றால் சரிதான். மேற்படி வீட்டிற்கான மின்சார ரசீது வா.சா.ஆ.4 என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கில் தான் எனது சொத்து உள்ளது என்றால் சரிதான். நான் என்னுடைய இடத்தில் ஆரம்ப காலகட்டத்தில் கூரைவீடு கட்டியிருந்தேன் என்றால் சரிதான்.

நான் எனது இடத்தில் வீடு கட்டும்போது தாவா சொத்தில் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சன்செட் எனது இடத்தில் தான் உள்ளது எப்படி தெரியும் என்றால் சர்வேயரை வைத்து அளந்தபோது தான் தெரியும். தாவா வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அளக்கப்பட்டது. அதற்கான ஆவணங்கள் ஏதும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது சம்பந்தமாக வசப்பரிகாரம் கோரி வழக்கு ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

வாதி எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்யாத காரணத்தால் தான் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம் – 12.23)**